

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம். செங்குந்தபுரத்தில் அரியலூர் மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த்துறை அரசு செயலர் திருமதி.வி.அமுதவள்ளி, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில், தொழில் முனைவோர்களுக்கான மாதாந்திர குறைதீர்க்கும் கூட்டம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர். பி.ராஜா ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலையில் நடைபெற்றது. உடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, பொது மேலாளர் (சிப்காட்) வி.ஆர்.வீரபத்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் கைத்தறி பூங்கா அமைப்பதற்கான இடம்!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டனர்!

அரியலூர், நவ. 11-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், செங்குந்தபுரம் பகுதியில் சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமையவுள்ள இடத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த்துறை அரசு செயலர் வி.அமுதவள்ளி. அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கும்பகோணம் சரகம் 14.12.1998 முதல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 3 மாவட்டங்களை உள்ளடக்கிய 48 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.

கும்பகோணம் சரகத்திற்குட்பட்ட அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம். செங்குந்தபுரம் பகுதியில் சிறிய அளவிலான கைத்தறி பூங்காவினை அமைக்கும் பொருட்டு செங்குந்தபுரத்தில் அமைந்துள்ள துணிநூல் துறையின் தமிழ்நாடு பஞ்சாலை கழகத்திற்குச் சொந்தமான 13,205.83 சதுர அடி இடத்தில் செயல்படாமல் உள்ள கைத்தறி கூடத்தின் இடத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துதுறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து தனியார் திருமண மஹாலில் நடைபெற்ற அரியலூர் மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குப்பின் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2023-24 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற கூட்டத்தொடரில் 10 சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஜெயங்கொண்டத்தில் நான்காவதாக சிறிய அளவிலான ஜவுளி பூங்கா அமைப்பதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதலாவதாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக கட்டடம் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிந்த வுடன் முதற்கட்டமாக 50 கைத்தறிகளும் அதனைத் தொடர்ந்து கூடுதல் கட்டடம் அமைத்து மேலும் 50 கைத்தறிகளும் அமைக்கப்படும். இப்பணிகளை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணம் நெசவாளர்களுக்கு முறையான ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதாகும். தற்போது நடைபெற்று வரும் சிறிய ஜவுளி பூங்காக்கள் மூலமாக ரூ.1000 முதல் ரூ.1200 வரை நாளொன்றுக்கு ஊதியமாக நெசவாளர்களுக்கு கிடைக்கப்பெறும்.

மேலும். இங்கு நெய்யப்படும் துணிகள் விற்பனை செய்யப்படும் போது கிடைக்கும் இலாபத்தில் ஒரு பங்குகள் நெசவாளர்களின் குடும்பத்திற்கு கிடைத்திட வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அரியலூரில் கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைவதற்கான இடம் குறித்து ஆய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, கும்பகோணம் சரக உதவி இயக்குநர் ராஜேந்திரன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியம், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய கழக செயலாளர் தனசேகர், இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க. இராமகிஷ்ணன்,மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் புனிதம், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ. கரிகாலன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள். கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்கள். நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் பலரும் கலந்துகொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# வல்லம் வடக்கு ஒன்றியத்தில் கழக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், கடலூர் இள. புகழேந்தி பங்கேற்பு!

செஞ்சி, நவ 12.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் வடக்கு ஒன்றியம் உடையன்தாங்கல், கண்டமநல்லூர், கள்ளப்புலியூர், பெரும்பூண்டி, சோழங்குணம், பென்னகர், தாமனூர் ஆகிய ஊராட்சியின் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் பென்னகர் ஊராட்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட பிரதிநிதி பிரபாகரன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர்,திமுக தேர்தல் பணிக்குழு செயலாளரும், மயிலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான கடலூர் இள.புகழேந்தி ஆகியோர் கலந்து கொண்டு ஓட்டுச்சாவடி பாக முகவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து திமுக தேர்தல் பணிக் குழு செயலாளரும்,தொகுதி பார்வையாளர் கடலூர் இள. புகழேந்தி பேசுகையில்,

கட்சி நிர்வாகிகள் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தொகுதி தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். ஓட்டுச் சாவடி பாக முகவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்காளர்கள் பட்டியலில் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நடைபெற உள்ள வாக்காளர்கள் திருத்தம்சிறப்பு முகாமில் பாகமுகவர்கள் அனைவரும் கலந்து கொண்டு

18 வயது பூர்த்தியடைபவர்கள்,வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களையும், புதியதாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள், மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும். முதலமைச்சர் குறிப்பிட்டது போல நிர்வாகிகள் அடிக்கடி கிராமத்தில் உள்ள மக்களை சந்தித்து அவர்களிடமிருந்து குறைகளை கேட்டு அறிந்து தலைமைக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், ஒன்றிய அவைத்தலைவர் ஏழுமலை, ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜலிங்கம், மணிமேகலை, ஞான மூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன்,ஒன்றிய பொருளாளர் பெருமாள், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன்,ஒன்றிய கவுன்சிலர் கோமதி பிரபாகரன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜீ உள்ளிட்ட பாக முகவர்கள்,ஊராட்சி கழக நிர்வாகிகள்,அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, நவ. 12-

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (12.11.2024 -செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு கவுந்தப்பாடி பாவா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.பெருமாள்சாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



பொருள்: துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி குறித்து

ஒன்றிய, நகர பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்துவது குறித்து

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) பட்டியல் வழங்குவது குறித்து

கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழிகாட்டுதலில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், பெரியகடை வீதி பகுதி1 செயலாளர் மார்க்கெட் எம்.மனோகரன், முன்னிலையில், பூமார்க்கெட் அருகில் உள்ள, அமுதசுரபி ஹாலில் நடைபெற்ற நிகழ்வில், தெற்கு தொகுதி பார்வையாளர் சத்யா பழனிக்குமார், பெரியகடை வீதி பகுதி1 க்கு உட்பட்ட வார்டுகள் 69,70,81 BLA 2 நிர்வாகிகள் ஒவ்வொருவரையும் நேரடியாக சந்தித்துப் பேசினார்.



சேலம் கிழக்கு மாவட்டம், தலைவாசல் தெற்கு, மத்திய, வடக்கு, வீரகனூர் பேரூர் சார்பில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் தலைவாசல் கொங்கு திருமண மண்டபத்தில் தொகுதி மேற்பார்வையாளரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான க.ஆனந்த் முன்னிலையில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள், சாத்தப்பாடி மணி, பாலமுருகன், அழகுவேல், பேரூர்ச் செயலாளர் சரவணன், குணசேகரன் மற்றும் பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்

# கழக முன்னோடி மு.இராகவன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.12-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக மூத்த முன்னோடி குன்றத்தூர் ஒன்றிய முன்னாள் துணைச் செயலாளர் வரதராஜபுரம் மு.ராகவன் (வயது 80) அவர்கள் நேற்று முன்தினம் காலை உடல்நலக்குறைவால் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

2001-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், திருப்பெரும்புதூர் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவர்.

# எழுத்தாளர் இந்திரா செளந்தர்ராஜன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 12-

பிரபல எழுத்தாளர் இந்திரா செளந்திரராஜன் நேற்று முன்தினம் மதியம் இயற்கை எய்தினார். தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

பிரபல எழுத்தாளர் இந்திரா செளந்தர்ராஜன் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

பிரபல எழுத்தாளர் இந்திரா செளந்தர்ராஜன் அவர்கள் உயிரிழந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மர்மமும் அமானுஷ்யமும் நிறைந்த புனைவுகளை எழுதுவதில் தேர்ந்தவரான இந்திரா செளந்தர்ராஜன் அவர்கள் நூற்றுக்கணக்கான நூல்களைப் படைத்தவர். வரலாற்றுக் காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்துச் சுவாரசியமான முறையில் புதினங்களைப் புனைவதில் வல்லவர். வெற்றிகரமான பல தொலைக்காட்சித் தொடர்களிலும் இந்திரா செளந்தர்ராஜன் அவர்கள் பங்காற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் வாசகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்டம் 104பவானி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட (BLA2) (BLC)வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் ஆலோசனை கூட்டம் ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் கழக நெசவாளர் அணி செயலாளரும், பவானி சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான எஸ்.எல்.டி.ப .சச்சிதானந்தம் கலந்து கொண்டு அனைத்து BLA2, வாக்குச்சாவடி முகவர்களுடனும் வாக்குசாவடி பாக நிலை முகவர்கள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசினார் . கூட்டத்தில் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், BLA2, BLC, நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு பேரூர் கழகம் சார்பில் மயூரா கூட்டரங்கில் பேரூர்க் கழகச் செயலாளர்,பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி தலைமையில் நடைபெற்ற வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் அரியப்பன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி பேசினார். இக்கூட்டத்திற்கு மாவட்டப் பொருளாளர் முருகன், பேரூர்க் கழக அவைத் தலைவர் அமானுல்லா, ஒன்றிய துணைச் செயலாளர் ரவி,பேரூர்க் கழக துணைச் செயலாளர்கள் பாபு, மாதேஷ், மாவட்டப் பிரதிநிதி மோகன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் குமரன், ஐ.டி.விங் துணை அமைப்பாளர் ஆனந்த், ஐ.டி.விங் தொகுதி பொறுப்பாளர் லேகேஸ்வரி, ஒன்றியப் பிரதிநிதிகள், வார்டுக் கவுன்சிலர்கள் மற்றும் கிளைச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.